# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM
# MIDDLE SECTIONS
# MID TERM EXAMINATION WORK SHEET ( 2025-26)

**SUBJECT – TAMIL** **CLASS – VI**

## தமிழ்

**அ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, உணர்ந்து, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்க.**

தேனீக்கள் மலைப் பொந்துகள், மரக்கிளைகள், கோபுரங்களின் இடுக்குகள் போன்ற இடங்களில் கூட்டை அமைத்து கொள்கின்றன. தேனீக் குடும்பத்தில் இராணித் தேனீ ஆண்தேனீ வேலைக்காரத் தேனீ ஆகிய மூவகையான பிரிவுகள் உள்ளன. வேலைக்காரத் தேனீக்கள் தேன் எடுத்தல், கூட்டைக் கட்டுதல், தேனடை கட்டுதல் போன்ற வேலைகளைச் செய்கின்றன. ஆண் தேனீக்கள் வேலை எதுவும் செய்வதில்லை. இனத்தைப் பெருக்கும் வேலையை மட்டுமே இராணித் தேனீ செய்கின்றது. ஒரு கூட்டில் ஒரு இராணித் தேனீ மட்டுமே இருக்கும். மற்றொரு இராணித் தேனீ அக்கூட்டல் தோன்றினால் அது தனக்கு வேண்டிய வேலைக்காரத் தேனீக்கள், ஆண் தேனீக்கள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொண்டு அக்கூட்டை விட்டு வெளியேறும். வேறு ஒரு புதிய தேன் கூட்டை அமைத்துக் கொண்டு வாழத் தொடங்கும்.

**வினாக்கள்** :-

1. தேனீக்கள் தங்கள் கூட்டை எங்கெங்கு அமைத்துக் கொள்கின்றன?
2. வேலைக்காரத் தேனீக்களின் வேலைகள் யாவை?
3. ஒரு கூட்டில் எத்தனை இராணித் தேனீக்கள் உண்டு?
4. ஆண் தேனீ செய்யும் வேலை என்ன?
5. கூட்டை விட்டு வெளியேறிய தேனி எப்படி வாழும்?

### இலக்கணம்

**ஆ. சான்று தருக.**

1. உயிர் நெடில் எழுத்து இடம்பெற்றுள்ள சொல் -
2. உயிர்மெய் குறில் எழுத்துகள் மட்டும் இடம்பெற்றுள்ள சொல் -
3. வினைச்சொல் -
4. ஈரெழுத்துச் சொல் -
5. உரிச்சொல் -
6. *ஓரெழுத்து சொல் -*

7. உயர்திணை -

8. பெண்பால் -

9. படர்க்கை இடம் -

10. பலர்பால் -

11. முன்னிலை இடம் -

12. அ∴றிணை -

13. ஒன்றன்பால் -

14. உயிர்மெய் எழுத்துக்கள் மட்டும் இடம் பெற்றுள்ள சொல்

15. ஆயுத எழுத்து இடம் பெற்றுள்ள சொல்

**இ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

16. மெய் எழுத்துகள் __________ வகைப்படும்.

17. ங், ஞ், ண், ந், ம், ன் என்பன __________

18. நான்கெழுத்துச் சொல் __________

19. பெயரையும் வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் __________

20. எழுத்துகளை உச்சரிக்கம் கால அளவிற்கு __________ என்று பெயர்.

21. ஆய்த எழுத்து பெறும் மாத்திரை __________

22. ஒருவர் செய்யும் செயல் அல்லது வினையைக் குறிப்பது __________

23. சால, நனி என்பதன் பொருள் __________

24. உயர்ந்த ஒழுக்கம் உடையவரைக் குறிப்பது __________

25. பேசுவோன் முன் நின்று கேட்பவரைக் குறித்துக் கூறுவது __________

**ஈ. அடைப்புக்குள் கூறியவாறு செய்க.**

26. நீ (தன்மை இடம் ஆக்குக)

27. மணிமேகலை ( மாத்திரை எத்தனை) ?

28. தாமிரபரணி - ( ‘தா’ எவ்வகை எழுத்து? )

29. மலர்கள் ( எவ்வகைப்பால்? )

30. மகிழ்ந்தான் (தகுந்த உரிச்சொல் சேர்த்து எழுதுக)

31. கயல்விழி படித்தாள் (பெயர்ச்சொல்லை எழுதுக)

32. பௌர்ணமி (எத்தனை எழுத்துச்சொல்?)

33. அம்மா (எழுத்துகளை வகைப்படுத்துக)

**உ.இலக்கணக்குறிப்பு தருக**

34. பனைமரம் -

35. அ, இ, உ, எ, ஒ -

36. மதுரைக்குச் சென்றான் -

37. நான் -

38. அவர்கள் -

39. கா, ஞா, யா, தை -

40. மாநகர் -

41. மாதவன் -

42. உறுமீன் -

43. தீ -

44. மலையைக் கண்டேன் -

45. மாணாக்கர் -

**ஊ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க.**

46. அ. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு திணை என்று பெயர்.
ஆ. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு பால் என்று பெயர்.
இ. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு எண் என்று பெயர்.
ஈ. எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு மாத்திரை என்று பெயர்.

47. அ. தமிழ் இலக்கணம் மூன்று வகைப்படும்.
ஆ. தமிழ் இலக்கணம் நான்கு வகைப்படும்.
இ. தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.
ஈ. தமிழ் இலக்கணம் ஆறு வகைப்படும்.

48. அ. ங் ஞ் ண் ந் ம் ன் - வல்லினம்.
ஆ. ங் ஞ் ண் ந் ம் ன் - மெல்லினம்
இ. ங் ஞ் ண் ந் ம் ன் - இடையினம்
ஈ. ங் ஞ் ண் ந் ம் ன் - உயிரினம்.

49. அ. அம்மா - மெய்யெழுத்து சொல்லின் முதலில் இடம்பெற்றுள்ளது.
ஆ. அம்மா - மெய்யெழுத்து சொல்லின் இடையீல் இடம்பெற்றுள்ளது.
இ. அம்மா - மெய்யெழுத்து சொல்லின் இறுதியில் இடம்பெற்றுள்ளது.
ஈ. அம்மா - மெய்யெழுத்து சொல்லில் இடம்பெறவில்லை.

50. அ. பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது படர்க்கை.
ஆ. பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது முன்னிலை.
இ. பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது தன்மை.
ஈ. பேசுவோன் அயலானைக் குறித்துக் கூறுவது பன்மை.

51. அ. அ.ஃறிணையில் ஒருமைக்குரிய பால் ஒன்றன் பால் ஆகும்.
ஆ. அ.ஃறிணையில் ஒருமைக்குரிய பால் ஆண் பால் ஆகும்.
இ. அ.ஃறிணையில் ஒருமைக்குரிய பால் பெண் பால் ஆகும் .
ஈ. அ.ஃறிணையில் ஒருமைக்குரிய பால் பலவின் பால் ஆகும்.

## செய்யுட்பகுதி

## அன்னைத்தமிழே!

**அ. பொருள் கூறுக.**

1. என்னில் -
2. ஆவி -

**ஆ. பிரித்தெழுதுக.**

3. பிறப்பெடுத்தேன் -
4. மறந்துன்னை -
5. சிறப்படைந்தேன் -

**இ. எதிர்ச்சொல் எழுதுக.**

6. புகழ் x
7. என்னில் x

**ஈ. விடை தருக.**

8. ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார் ?
9. எதைச் சொல்ல முடியவில்லை என்று நா.காமராசன் குறிப்பிடுகிறார் ?

**உ. அடி பிறழாமல் எழுதுக.**

10. 'அன்னைத் தமிழே' எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

## வெற்றி வேற்கை - சான்றோர் மொழி

**அ. பொருள் கூறுக.**

1. தெள்ளிய -
2. கயம் -
3. ஆல் -

4. சினை -

**ஆ. பிரித்தெழுதுக.**

5. பெரும்படை -
6. சிறப்படைந்தேன் -
7. நிழலாகும் -

**இ. பொருத்தமான நிறுத்தக்குறி இடுக.**

8. நீ எங்கிருந்து வருகிறாய்
9. ஊரிலிருந்து தாத்தா பாட்டி சித்தப்பா சித்தி வருகிறார்கள்
10. ஆகா அற்புதமாக உள்ளதே

**ஈ. விடை தருக.**

11. ஆல மரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை ?
12. வெற்றி வேற்கைப் பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது?

**உ. அடி பிறழாமல் எழுதுக.**

13. ‘தெள்ளிய’ எனத் தொடங்கி நிழலாகும்மே வரை.

## நன்னெறி

**அ. பொருள் தருக.**

1. இன்சொல் -
2. வன்சொல் -
3. அழல்கதிர் -
4. தண்ணென் கதிர் -
5. இருநீர் -
6. அதிர்கின்ற -

**ஆ. பிரித்தெழுதுக.**

7. வியனுலகம் -
8. இன்சொல் -
9. வன்சொல் -

**இ. நிரப்புக.**

10. நன்னெறியின் ஆசிரியர் ___________________
11. நன்னெறியில் __________ நேரிசை வெண்பாக்கள் உள்ளன.

**ஈ. விடை தருக.**

12. உலகம் எப்போது மகிழும் என்று நன்னெறி கூறுகிறது ?

13. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும் ?

**உ. அடி பிறழாமல் எழுதுக.**

14. **'இன்சொலால்'** எனத் தொடங்கும் நன்னெறிப் பாடலை எழுதுக.

## உரைநடை - பனைமரச் சிறப்பு

**அ. பொருள் கூறுக.**

1. வல்லமை -

**ஆ. எதிர்ச்சொல் எழுதுக.**

2. விழுந்து x

**இ. பிரித்தெழுதுக.**

3. சாலையோரம்

4. குருத்தோலை

5. கரையோரம்

**ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

6. ___________ பனை மரத்தில் காய்த்துப் பழுக்கும்.

7. பண்டைய இலக்கியங்கள் பற்றித் தெரிந்து கொள்ள உதவியது________

8. ___________ நம் தமிழ்நாட்டின் மாநில பறவையாகும்.

9. பனைமரம் __________ தாங்கும் வலிமை பெற்றது.

10. தமிழ்நாட்டின் மாநில மலர் ______________

11. நீராரும் கடலுடுத்த என்பது ________________

12. தமிழ் நாட்டின் மாநில விலங்கு ________________

**உ. பொருத்துக.**

13. ஆ - காடு
14. கை - பசு
15. பூ - கரம்
16. கா - மலர்

**ஊ. ஒரே பொருள் தரும் வேறு சொற்கள் தருக.**

17. அம்மா - _____________, ________________

18. திரள் - _____________, ________________

**எ. விடை தருக.**

19. பனைமரம் கற்பகத்தரு என்று ஏன் அழைக்கப்படுகிறது ?
20. பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம் ?
21. பனைமரத்தைச் சார்ந்து வாழும் பறவைகள் யாவை ?
22. பனை ஓலைகள் எவ்வாறு பயன்படுகின்றது ?

## கரிகாலன் கட்டிய கல்லணை

**அ. பொருள் தருக.**

1. வியத்தகு -
2. சூழ்ச்சி -

**ஆ. பிரித்தெழுதுக.**

3. அமைந்துள்ளது -
4. பெருவெள்ளம் -

**இ. சேர்த்தெழுதுக.**

5. நீர் + பாசனம் -
6. அமைந்து + உள்ளது -
7. பெருமை + வெள்ளம் -
8. அரசு + ஆட்சி -

**ஈ. எதிர்ச்சொல் எழுதுக.**

9. அடித்தளம் x
10. பழைமை x
11. தொலைவில் x

**உ. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

12. தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு _____________.
13. கல்லணை அமைந்துள்ள மாவட்டம் _____________.
14. கல்லணை _______________ நூற்றாண்டில் கட்டப்பட்டது.

**ஊ. விடை தருக.**

15. தமிழ் நாட்டிலுள்ள முக்கிய அணைகள் யாவை ?
16. கரிகாலன் கல்லணையைக் கட்ட காரணம் யாது ?

**எழுதுதல்**

**அ.** உடல்நலமின்மையால் பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்கு விண்ணப்பம் எழுதுக

**அல்லது**

சகோதரியின் திருமணம் காரணமாக பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**ஆ. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

முன்னுரை - காணப்படும் இடங்கள் - மயிலின் தோற்றமும் பண்புகளும் - முடிவுரை.

**அல்லது**

முன்னுரை - நான் விரும்பும் விலங்கு **-** முயலின் தோற்றமும் பண்புகளும் -முடிவுரை.

**இ. முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குப்படுத்திப் பத்தியாக்குக.**

1. *சித்தார்த்தர் அன்னப் பறவையை எடுத்து அன்புடன் தடவிக் கொடுத்தார். அதன் காலுக்கு மருந்திட்டார்.*

2. *அப்பொழுது அன்னப்பறவை ஒன்று வானில் மகிழ்ச்சியாகப் பறந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்.*

3. சித்தார்த்தர் தாமே *அன்னப்பறவையை* காப்பாற்றியதாகவும் எனவே தமக்கே உரிமை என்றும் கூறினார்.

4. *அப்பொழுது அங்கு வந்த தேவதத்தன், அன்னப் பறவையை தாமே அம்பு எய்து வீழ்த்தியதாகவும் , அன்னப் பறவையை தன்னிடம் தருமாறும் வேண்டினான்.*

5. *இளவரசர் சித்தார்த்தர் ஒருநாள் மாலைப்பொழுதில் தமது அரண்மனைப் பூந்தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார்.*

6. *திடீரென்று எங்கிருந்தோ விரைந்து வந்த ஓர் அம்பு அன்னப் பறவையின் காலில் பாய்ந்தது. அம்பினால் காயம்பட்ட அன்னப்பறவை சித்தார்த்தரின் காலடியில் விழுந்தது.*

---------------------------